சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் 02.08.2025
ம.சா.1 - பழனியப்பன் S/o வெள்ளைக்கண்ணு
EA 3/23 in EP No. 3 /2021 :
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :

நிறைவேற்று மனுவில் கண்டுள்ள சொத்தும், மற்றும் மறைந்த என்னுடைய தந்தை பெயரில் உள்ள சொத்துக்களும் கூட்டு பாத்திய சொத்துக்கள் என்று குறிப்பிட்டு இந்த மனுவினை தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரிதான். என் தந்தை பெயரில் உள்ள அனைத்து சொத்துக்களும் இந்த மனுவில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனுவில் அவ்வாறு அனைத்து சொத்துக்களும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். என்னுடைய கூற்றுபடி அனைவருக்கும் கூட்டுபாத்தியம் உள்ளது என்றால் அனைவருக்கும் சரிபங்கு உள்ளது என்று அர்த்தம் என்றால் சரிதான். கடந்த 03.04.2006 அன்று என்னுடைய தாயார் சுப்புலெட்சுமி என்னுடைய சகோதரர்களான ரவிச்சந்திரன் மற்றும் சின்னையா ஆகியோர் எங்களுக்கு பூர்விக பாத்தியமான சொத்துக்களை சுப்பையா அம்பலம் குமாரர் வீரன் என்பவருக்கு சர்வே நம்பர் 61/9B1, 17 செண்டை விற்பனை செய்திருக்கிறார்கள் என்றால் சரிதான். மேற்படி கிரையமானது கிரைய ஒப்பந்தம் இந்த வழக்கு தொடர்பாக போடப்படுவதற்கு முன்பாகவே விற்பனை செய்த சொத்து ஆகும். ஏற்கனவே பூர்விக சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டு, அந்த பாகத்தில் என் தாயார் என் சகோதரர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை தான் அவர்கள் தனிப்பட்ட முறையில் வீரன் என்பவருக்கு விற்பனை செய்திருக்கிறார்கள் என்றால் சரிதான். அதேபோல் தான் வாய்கறால் பிரிக்கப்பட்ட பாக சொத்துக்களை என்னுடைய தாயாரும், என் தம்பி சின்னையா ஆகியோரும், அவர்களுக்கு உள்ள பாக சொத்துக்களை அமுதாவிற்கு கிரைய ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள்

என்றால் பாகம் பிரிக்கப்படவில்லை, பொது சொத்தாகும். நான் தவறாக சொல்கிறேன் என்றும் ஏற்கனவே எங்கள் குடும்ப உறுப்பினர்களிடையே பூர்விக சொத்துக்களை பொறுத்து பாகம் பிரிக்கப்பட்டதால் தான் பூர்விக சொத்துக்களை 2006ம் ஆண்டே விற்பனை செய்துள்ளார்கள் என்றும் அதை மறைத்து தற்போது வழக்கிற்காக பாகம் பிரிக்கப்படவில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. என் தந்தை 06.06.2003ம் ஆண்டு காலமாகிவிட்டார். பிரிபடாத பாக சொத்தானது எங்களது குடும்ப சொத்துக்களுக்கு இருக்கிறதா என்றால் இருக்கிறது. பிரிக்கப்படாத பாக சொத்தில் பாகஸ்தர்களுக்கு அவரவர்களுக்கு உரிய பாகம் இருக்கிறது என்றால் சரிதான். பிரிக்கப்படாத பாக சொத்துக்களை பொறுத்து அவரவர் பாகத்தை அவர்கள் விற்பனை செய்ய உரிமை உண்டு என்றால் பிரிக்காமல் விற்க முடியாது. பிரிக்கப்படாத பாக சொத்துக்களை அவரவர் விற்பனை செய்யும் போது மற்ற கூட்டுபாகஸ்தர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க அவசியமில்லை என்றால் சரியல்ல. கூட்டு உரிமையாளர்கள் என்ற அடிப்படையில் இந்த மனுவில் எனக்கு உரிமை உள்ளது என்று ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட சொத்தை பொறுத்து உரிமைகோர இயலாது என்றால் சரியல்ல. கூட்டு உரிமையாளர் என்ற அடிப்படையில் இந்த மனுவில் யாதொரு பரிகாரமும் கோரி இந்த மனு தாக்கல் செயல்படவில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் கூட்டு பாகம் கோரி மனு தாக்கல் செய்து பரிகாரம் கோரும் உரிமையை இழந்துவிட்டோம் என்றால் சரியல்ல. இந்த மனு சொத்து அல்லாமல் தனியாக 80 ஏர்ஸ் இருக்கிறது என்றால் 80 செண்டு இருக்கிறது. என்னுடைய தாயாரும் சகோதரரும் அமுதாவிடம் சட்டப்படி ஒப்பந்தம் போட்டு தான் சொத்து ஏற்றுதல் ஆற்றுகை பரிகாரம் தீர்ப்பு செய்யப்ப்பட்டு சொத்து சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டு நிறைவேற்று மனு தாக்ல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பொதுவாக மனு சொத்தானது ஏற்கனவே அவர்களுக்கு

பாகத்தில் ஒதுக்கப்பட்ட பிரிக்கப்படாத சொத்தாக இருந்தாலும், அவர்களுடைய பாகத்தை பொறுத்த வரை விற்பனை செய்வதற்கு அதிகாரம் உள்ளது என்பதால் அவர்கள் எழுதி கொடுத்த கிரைய ஒப்பந்தம் செல்லும் என்றும் அதை பொறுத்து சுவாதீனம் பெறுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட இந்த நிறைவேற்று மனு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல. நிறைவேற்று மனுவை பொறுத்தவரை எந்தவிதமான பரிகாரம்கோரும் மனு தாக்கல் செய்யப்படாததால் நான் தாக்கல் செய்திருக்கும் இந்த தடை மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. அதனால் நான் பொய்யான விஷயத்தின் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.08.02 18:42:20 +0530

Sub Judge

Melur